உ



வடமராட்சி

வடதுன்னையம்பதி வாசரும்

உயர்சைவ நன்னெறியினருமான

காலஞ் சென்ற

# திரு. சின்னத்துரை சந்திரகுமார்

அவர்கள்

சிவபதமடைந்தமை குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறவழிகள் நாடினான்

இறை அடியைத் தேடினான்



அமரர்

# சின்னத்துரை - சந்திரகுமார்

மண்ணில்
03 - 07 - 1964

விண்ணில்
05 - 03 - 1997

திதிவெண்பா

தாதுமதி மாசிதனைச் சாரபர பக்கத்தி
னேதமிலா ஏகா தசிதிதியே- தீதறியாச்
சந்திரகு மாரன்பன் செங்கையன லேந்துசிவன்
தந்தஅடி சார்ந்தார் சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## தோத்திரப் பாக்கள்

திருச்சிற்றம்பலம்

### விநாயகர் வணக்கம்

பிடியத இருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

### தேவாரம் - திருத்தாண்டகம்

அங்கமே பூண்டாய் அனல் ஆடினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கமொன் றில்லாத படர்ச டையினாய்
பாம்பொடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்
சங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போது கின்றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே,

### திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

அன்ன வேயெனை யாண்டுகொண் டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னாற்றிருக் கயிலையி லிருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாலா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறையடி தொழுதல்

## கோயிற் கடவைப் பிள்ளையார்

செய்தே னிலைத்தவ றென்மன மொப்பித் தினமுமுனைப்
பெய்தாள் எனவீரந் தேனுனை யேத்திப் பணிந்தனனே
உய்யாறு நின்றன் ஒளியடி என்றே உளம்பதித்தேன்
கைதா விநாயக கைவிட மாட்டேன் கனிந்தருளே.

நின்னடி எண்ணி நிதம்மல ரீட்டு நிறைவு கண்டே
னின்னலைச் சாரும் புவியுற வேவிட எண்ணினனுன்
பொன்னடி தானே சதமெனக் கொண்டேன் புகழமைந்த
நன்னிலம் கோயிற் கடவையை நாடினை நல்கருளே.

அப்பனுக் காகும் சிவராத் திரியினில் அம்புடனே
இப்பதி விட்டகன் றாலேவை வேட்டை இதயமொப்ப
தப்பறுத் தாளெனை என்றே பணிந்த தறிகுவைநீ
ஒப்பில தாமடி யுற்றுயர் வெய்திட ஊட்டருளே.

## தொண்டமனாறு செல்வச்சன்னிதி முருகன்

வேலைவிட்டாயென்ற வேளையிற் சூரனும் வீரங்கெட்டு
வேலைவிட்டானென்று கூறிடக் கேட்டேன் விதிவலியால்
ஆலையிற் பட்ட கரும்பாகி நைந்தேன் வளரெழிலுன்
காலையுற் றேயருள் கண்மிட ஏத்தினன் காட்டருளே.

பாடின னேயுன் திருப்புகழ் நாளும் பரவசமாய்
ஆடின னானந்தம் கூடிடச் சன்னிதி ஆலயத்தில்
வாடினன் பூமிப் பிணியத னாலுனைப் பார்த்துயரத்
தேடின னின்னடி சேவற் கொடியினை செய்யருளே.

## தீபிலிக்கண்டை வைரவர்

வெள்ளிக் கிழமைகளில் வைரவரே நின்வடிவம்
உள்ளத்தே எண்ணி உவப்பேனே- வெள்ளமெனக்
கண்ணிரண்டும் பாயவே காலடியையாசித்தேன்
தண்ணிழலாம் இன்னருளே தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபமதில் நின்றொளிரும் தூபப் படைதொழுது
தூபப் புகையிட்டுத் தோத்திரிப்பேன்—பாவவினை
போக்கிப் பிணியுறவும் போக்கி அடியேனைக்
காக்க அழைப்பாய் இனி.

## அத்துளு அம்பாள்

பூணும் நவராத் திரிநாட்கள் பூசிப் போடுன் கோயிலிலே
காணும் அழகு முகம்கண்டு கண்கள் குளிர நிற்பேனே
வீணிவ் வுடலம் அறிகின்றேன் வற்றாக் கருணைத் தாயாரே
மாணுற் றிலங்கு மடியிணையே பேதை பெறவே அருள்வாயே.

வீதி தோறும் புகைசூழ வந்தே பொங்கல் வழங்குவமே
சோதி வடிவ அம்பாளே துயரப் பூமி சலித்ததம்மா
பேதித் தாளும் திருவடிவே பிழைகள் பொறுத்து நின்னரிய
பாதப் பேறு நல்கம்மா பறந்து வருவேன் காப்பாயே.

## வல்லிபுர ஆழ்வார்

நிலநிற வண்ணனே நச்சரவில் நீயிருந்து
கோலமது காட்டக் களிப்போமே—காலமெல்லாம்
உன்னடிக்கே ஆசைக் கனவுகளைக் கண்டேனே
பொன்னடித் தாளுதியிப் போ.

பட்டைநா மம்பூசிப் பாற்கடலிற் றோய்ந்தாலே
விட்டொழியும் வெய்ய வினையெல்லாம்—கிட்டிணனே
கோபால கோவிந்தா மாயவா கும்பிட்டேன்
மாபாவம் தீர்த்தருளு வாய்.

—மன்னவன்—

காலஞ்சென்ற அமரர் சின்னத்துரை - சந்திரகுமார்

## நினைவிரங்கற் பாக்கள்

### தாய் சின்னப்பிள்ளை

ஒருபத்து மாதங்கள் உதரத் தேந்தி
உறுவலிகள் தாங்கியிங்கே பெற்றெ டுத்தேன்
கருமத்திற் கண்ணாக இருந்தாய் காணும்
கல்யாணக் காட்சிதனைக் காட்டி விட்டு
தரிசித்த கடவுளடி ஓடி னாயோ
தழலிடையிற் புழுவாகி தவிக்கி றேனே
ஒருமுத்து பிருந்தாவைக் கூட எண்ணா
தோடினையே வாடுகிறோம் வதங்கு கிறோம்

### தகப்பன் சின்னத்துரை

பாசமுடன் வளர்தேனே இறுதிக் காலம்
பார்த்தெடுக்க வேண்டியவன் சுருண்டு போக
நாசமெனக் கேனிறைவன் தந்தா னென்று
நானிரங்கி நிற்கையிலே ஓடி விட்டாய்
மோசமிது தாங்குதற்கு முடியு மாமோ
மனம்பிளந்த சோகத்தால் மாய்கி றேன்நான்
தேசமிதில் எனக் காற வழியு முண்டோ
திசைகெட்டு வலிகெட்டுத் தவிக்கி றேனே

### மனைவி சுமதி

ஆலறுகு போல் வாழ்க என்றெல் லாரும்
அறுகரிசி இட்டார்கள் ஆனால் இங்கே
கோலமுகம் கண்மூடிக் கிடக்கு தையோ
கொஞ்சுகிற பிஞ்சொன்று கதறு திங்கே
காலனென்னும் கொடியவனே ஒழிக்க வேறு
காலமில்லை யாமோநான் கதறி நிற்கும்
கோலமிதைப் பார்க்காது போய்விட் டாயோ
கொடியவனே ஆறவழி கூறு வாயோ

படுத்திருந்த கட்டிலரு கிருந்து தொண்டு
பரிவோடு செய்தேனே கையை ஏந்தி
கொடுத்துவிடு கணவனையென் கைக்கே என்று
கோயிலெல்லாம் வேண்டினனே குழந்தை யோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடித்தழவே சென்றுவிட்டீர் இனிஎன் செய்வேன்
சுவையுணவு தந்தவாய்க் கரிசி யிட்டேன்
வெடிக்குதிங்கே நெஞ்சமிது நூறாய் ஆறும்
வழியில்லை வதைபட்டு மாய்கி றேனே.

### மகள் பிருந்தா

மடிகிடத்திக் கொஞ்சியஎன் அய்யா என்னை
மலர்க்கொத்து மாணிக்கம் பவளம் என்று
அடுக்கடுக்காய்ச் சொன்னீர்கள் அணைத்து வைத்தே
அன்புமுத்தம் ஆயிரமாய்த் தந்த தெல்லாம்
துடித்தழவே விட்டோடும் நோக்கத் தாலோ
வார்த்தேனே குளிர்பானம் உங்கள் வாயில்
வெடித்தழுது வெம்புமம்மா வடிவம் கண்டு
வெம்புகிறேன் அப்பாநான் என்செய் வேனே

தேகத்தின் சூடு துணையென்று வாழும் சிறுமழலை
வேகித் துடித்திட வெம்புமம் மாமனம் வாடிடஏன்
போகத் துணிந்தனை அப்பா புழுவாய்ப் புரளுகிறேன்
சோகம் துணையென வாழவிட் டேளோ சரிந்தனையே

### ஆண்சகோதரர் வீரகுமார்-சூரியகுமார்

பிரிந்தறியோம் பாசத்தாற் பிணைந்திருந்தோம்
போய்வரவே விடைகேட்டுச் சென்ற பின்பு
அரிந்ததெங்கள் இதயத்தை என்ப தேபோல்
அவலத்தின் சேதியிது கிடைத்த தையோ
தெரிந்திருந்தால் அருகிருந்தே பார்த்திருப்போம்
திகைத்துருகித் துரும்பாகித் துடிக்கி றோம்நாம்
எரிந்தழிந்து போனதுவோ உடலும் இங்கே
எவராற்று வாரெபமை என்செய் வோமே

### சகோதரிமார் சி. செல்வராணி, நாகராணி, தெய்வராணி

செடிபடரும் கொடிகளெனச் சேர்ந்து வாழ்ந்தோம்
தின்பனவும் சேர்ந்தேதான் என்றே வாழ்ந்தோம்
கொடியபிணி ஒன்றுக்கோ ஆளாய் எம்மைக
குழறியழச் செய்தோடி விட்டீர் தேம்பி
வடிகிறகண் ணீருடனே மனைவி பிள்ளை
வதைபடுவர் என்றேனோ எண்ண வில்லை
தொடியளவும் ஆறலின்றித் தேம்பித் தேம்பி
நின்றலற வைத்தேனோ சென்றாய் ஐயோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாமன் அழகையா, மாமி பத்மா

பரிவான பண்பான மருக னாகப்
    பழகியெங்கள் பாசத்தைப் பெற்று நின்றீர்
பிரியேனே என்றுவந்தீர் ஆண்டி ரண்டிற்
    பிரிந்திட்டீர் என்றாலிச் சோகம் நெஞ்சை
எரியாதோ இளங்குருத்துப் பிருந்தா வோடு
    எம்மகள்தான் படுந்துயரம் தாங்க லாமோ
புரியாத விடையாகிப் போன வாழ்வைப்
    படைத்தவனேன் தந்தானே புரியோ மையோ

### மைத்துனி சுதனி, சுதா

ஆசையாய் வைத்த செடி யொன்று மொட்டே அரும்புகையில்
வீசிய காற்றால் அடிபட்டு வீழ்ந்ததே போலஇன்சொல்
பேசிய அத்தான் இறந்தனை யோதுயர் தீர்வதுண்டோ
நாசமிவ் வாறா நமக்காகி வந்தது நைந்தனமே

### மருமக்கள் வசந்திசெல்வம், சிவச்செல்வன், சிவச்செல்வி

சந்திர மாமா என அழைத் திட்டாற் சிரிப்புதிர
வந்திரு என்று வரவேற்கும் வாயும் அடங்கியதோ
சுந்தரக் குஞ்சி பிருந்தா துடிப்பளென் றெண்ணவில்லை
அந்தரம் என்ன அடைந்தது சோகம் அளப்பரிதே

### பேறாமக்கள். அனுசூயன், ஆரணி, அபிநயன்

வந்தது நேற்றைக்கு போனதோ இன்றைக் கெனஅமைந்தால்
எந்த விதத்தில் இதுநீதி யாகும் இதயமெல்லாம்
நொந்தழு தேதிலம் முற்றும் புரள்வோர் நிரம்பிவிட்டார்
இந்தத் துயரினைச் சித்தப்பா ஏனோ கொடுத்தனையே.

### மாமன மாமி வேலாயுதம், இலங்கேஸ்வரி

கடவுளர் தொண்டு செய்து கண்ணியம் கடமை என்று
திடமன துடனே வாழ்ந்து சீர்பெற நின்றீர் வாழ்வு
திடுமென முடிந்த வேளை சிந்தையே திகைத்து விட்டோம்
படுதுயர் ஆறும் மார்க்கம் புரியவே இல்லை ஐயோ

### சிறியதந்தைமார் ஐயாத்துரை, பொன்னுத்துரை, இராசதுரை

கண்ணலை சொரியும் அன்பு கடுமொழி கேட்ட தில்லை
எண்ணமே புனித மாக இருந்த எம் மகனே தேகம்
மண்ணிலே வீழ்ந்த சேதி மனத்தையே உருக்கிற் றப்பா
எண்ணிடும் வேளை எல்லாம் ஏக்கமே பெருகு திங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிறியதாய்மார் பரமேஸ்வரி, குணமணி, செல்வரத்தினம்

அழிந்ததோ மகனே தேகம் அடங்கிற்றே எங்கள் மூச்சு
ஒழிந்ததோ மகிழ்வு சுற்றம் ஓலமிட் டழப்போ னாயோ
பிளந்திடு நெஞ்சத் தோடு புலம்பிட வழிவிட் டாயோ
இளங்குருத் துனக்கே னிந்த இழவிது கிடைத்த தையோ

### அண்ணிமார் கலாநிதி, மாதினி

பிறப்பினைத் தந்த தெய்வம் பீடுசேர் வாழ்வு காட்டிச்
சிறப்புடன் வாழ வைத்தல் தான்முறை உங்க ளுக்கேன்
இறப்பினைச் சடுதி யாக்கி இத்துயர் அடைய வைத்தான்
பொறுத்திட முடியு மோவிச் சோகத்தை என்செய் வோமே

### மைத்துனர்: சிவஜோதிபாகம், ஆனந்தன்

கனவிலும் நினைந்தோ மில்லை கல்யாணக் காட்சி எங்கள்
நினைவினை விட்டே இன்னும் நீங்கிடவில்லை நாங்கள்
அனைவரும் கதிகெட் டோமே ஆரைஆர் ஆற்று வோமோ
புனைபிறை இறைவ னிந்தப் பிழையினைச் செய்த தேனோ

### (பொது)

கோயிலிற் தொண்டு குறைவறச் செய்து களித்தவனை
நோயினில் வீழ்த்தி நொடியினிற் கொன்றது நீதியென்றால்
பாயுங் கருணை யுளதென்று யாருமே பேசுவரோ
நேயம் நிறைந்தவன் தன்னை இழந்து நலிந்தனமே

ஆண்டுக ளோரிரண் டாகுமுன் தாலி யகற்றிவிட்டே
வேண்டுவ தோ பொட்டுப் பூ என்று நீக்கி வதங்கிறாள்
தூண்டு சுடராம் சுமதியும் பெற்ற தவக்கொழுந்தும்
மாண்டானை எண்ணித் துடிக்கிறார் என் சொல்லி மாற்றுவதே

### தேற்றம்

தோற்றும் கருப்பையிற் செத்தவ ரெத்தனை தாரணியில்
தேற்றுப் பிறந்தவ ரின்றே இறந்ததும் நாமறிவோம்
கூற்றன் அழைத்தனன் தெய்வ அடியிணைக் காக்கிவிட்டான்
ஆற்றும் துயரல்ல ஆயினும் ஆறுக பேணறமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எம் குடும்ப ஒளியாகி நின்ற அமரர் சந்திரகுமார் அவர்களது இறுதிக்கிரியை வேளையிலும், அந்தியேட்டி நிகழ்வுகளிலும் வந்துகலந்து சிறப்பித்தோர், துக்கம் பகிர்ந்தோர், துணைநின்று உதவினோர் அனைவர்க்கும் இதய நன்றிகள்

துன்னாலை, கரவெட்டி
04-04-1997

குடும்பத்தினர்

தமிழ்ப்பூங்கா அச்சகம்—நெல்லியடி, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org